Demographic Training Institute

*363 Q.—THIRU A. PARANDHAMAN: Will the Hon. the Minister for Health be pleased to state whether there is any proposal under the consideration of the Government to request the Central Government to open a Demographic Training Institute in Tamil Nadu?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இல்லை.

திரு. ஆ. பரந்தாமன்: தலைவர் அவர்களே, மக்கள் தொகைப் பெருக்கத்தைப்பற்றிப் பயிற்சி பெற வேண்டுமானால் இப்பொழுது இந்தியாவிலேயே பம்பாய் நகரத்திலுள்ள டெமொக்ராஃபிக் ட்ரெயினிங் இன்ஸ்ட்டிட்யூட்டுக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, தமிழ்நாட்டில் இப்படிப்பட்ட ஒரு நிலையத்தை ஏற்படுத்தும்படி நமது அரசு மத்திய அரசை வற்புறுத்துமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, பல பேர் பணியாற்றுகின்ற அந்தப் பணியினுடைய புள்ளிவிவரங்களை ஒருவரேகூட சேகரித்துவிட முடியும். இப்பொழுது அதற்குத் தேவையான அளவு பயிற்சியுடையவர்கள் இருக்கிறார்கள். பலரும் பயிற்சி பெறச் செய்தால் அதற்குப் பின்னர் வேலை தரவேண்டுமென்ற கட்டாயத்தை அவர்கள் எழுப்புவார்கள். ஆகவே, இது மிக அவசியம் என்ற கருத்து அரசால் ஏற்கப்படவில்லை.

வெறிநாய்க் கடிக்கான மருந்து தயாரிப்பு

*364 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெறி நாய்க் கடி நோய்க்கான மருந்து தயாரிக்கும் திட்டம் ஏதேனும் செயல்படுத்தப்பட இருக்கிறதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) வெறிநாய்க் கடிக்கான மருந்து கூனூரில் பாஸ்டர் நிலையத்திலிருந்து ஏற்கனவே தயாரிக்கப்பட்டு கிடைத்து வருகிறது. இதைத் தவிர அம்மருந்து தயாரிப்பதற்கான வேறு செயற்குறிப்பு எதுவும் இல்லை.

1973 நவம்பர் 24]

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, தற்போது வெறிநாய்க் கடிக்காகத் தயாரிக்கப்படுகிற மருந்தைக் கொண்டு நீண்ட நாட்கள் சிகிச்சை அளிக்கவேண்டியிருக்கிறது. ஆகவே, குறைந்த காலத்தில் சிகிச்சை அளிக்கும் அளவுக்கு ஒரு புதிய மருந்து கண்டுபிடிக்கத்தக்க ஆராய்ச்சியை மேற்கொள்ள அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, உலகம் முழுவதும் நடைபெற்ற ஆராய்ச்சியினுடைய பயனுகக் கிடைத்திருப்பது 'anti-rabic serum' அது 'Beta propiolactone' என்ற பெயரால் வழங்கப்படுகிறது. இந்த மருந்து எந்த அளவு தேவையோ அந்த அளவு உற்பத்தியாகிறது. இதற்குமேல் புதிய ஆராய்ச்சிகள் தனியாக அதற்காக நடத்துவதற்கு நமக்கு அதிக வாய்ப்பும் வசதியும் கிடையாது.

திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, வெறிநாய்க் கடிக்கு உடனே சிகிச்சை பெற வேண்டியிருக்கிறது. ஆகையால், வெறிநாய் என்று கண்டுபிடிக்கப்பட்டவுடனே அந்த நாயை அப்புறப்படுத்திக் கொல்ல வேண்டிய ஏற்பாட்டை நகர சபை செய்ய வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, நகராட்சி மன்றங்கள், ஊராட்சி மன்றங்கள் அந்தப் பணியை நடத்த வேண்டும். அந்தப் பணியை அவர்கள் செய்வதன்மூலமாகப் பொது மக்களுக்கு நன்மை கிடைக்கும்.

திரு. எ. சுவாமிதாஸ் : தலைவர் அவர்களே, தற்பொழுது இந்த வெறிநாய் கடிக்கு சிகிச்சை செய்யவேண்டும் என்று சொன்னல் தலைமை மருந்தகங்களுக்கு செல்லவேண்டியிருக்கிறது. ஆகவே, உடனே சிகிச்சைப் பெறுவதற்கு வசதியாக தாலுகாதோறும் இருக்கும் மருத்துவமனைகளில் இந்த வெறிநாய் கடிக்கு மருந்து கொடுத்து சிகிச்சை செய்வதற்கு உரிய ஏற்பாட்டை அரசு செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, பொதுவாக இப்படிப்பட்ட "சீரம்" ஆகியவை பாதுகாத்து வைக்கப் படவேண்டும். நீண்டகாலத்திற்கு வைத்திருக்க முடியுமா என்பதும் எனக்குத் தெரியாது. ஆகவே, ஒரு குறிப்

பிட்ட இடத்தில் உடனே கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. வெறிநாய் கடித்த ஏறத்தாழ 15, 20 நாட்களுக்குள் 7 ஊசி, 14 ஊசி போடவேண்டிய நிலைமை இருக்கிறது. அதற்கு இப்பொழுது பெரிய இடையூறு இருப்பதாகத் தெரியவில்லை.

திரு. த. சோனையா : வெறி நாய் கடித்தவர்கள் நாயைப் போல குலைத்துக் கொண்டிருப்பார்கள். அப்படி சாகின்ற தருவாயில் இருந்த அவர்களைக் காப்பாற்ற முடியாது என்று டாக்டர்கள் கைவிட்ட கேஸ்களைக்கூட நாட்டு வைத்தியர்கள் குணப்படுத்தி விடுகிறார்கள். அதுவும் இராமநாதபுரம் மாவட்டத்தில் நிறைய அப்படிப்பட்ட மருத்துவர்கள் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட மருத்துவர்களை அழைத்து மூலிகையின் தரத்தைத் தெரிந்து, அதை எல்லா அரசாங்க ஆஸ்பத்திரிகளிலும் வைப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அப்படிப்பட்ட மருந்துகளைப் பற்றி ஆய்வு நடத்தவேண்டும் என்பது இப்பொழுது அண்மையில் மேற்கொள்ளப்பட்டிருக்கிற கொள்கையாகும். அங்கே அவர்கள் அந்த மருந்தைப்பற்றிய விவரங்களை நமக்குத் தெரிவிக்கும்படிச் செய்வார்களேயானால், அரசு அந்த மருந்தைப் பயன்படுத்த முடியுமா, எத்தனை பேர்களுக்கு வழங்கி பயன் ஏற்படுத்த முடியும் என்பதை நிச்சயமாகச் சொல்ல முடியாது—அந்த விவரங்களின் அடிப்படையில் மருந்து கிடைத்து வழங்கினால், அதை சோதனை நடத்திப் பார்த்து, பின்னரே உறுதி கூற முடியும்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : அமைச்சர் அவர்கள் வெறிநாய் தடுப்பு ஊசி மருந்து இருக்கிறது என்று சொல்கிறார்கள். அதே நேரத்தில், அம்மாதிரி கேஸ்கள் வரும்பொழுது, ஜெனரல் ஆஸ்பத்திரியில் ஒரே ஒரு பெட் தான் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதிலே ஒரு பேஷண்ட் அங்கு வந்துவிட்டால் அதை வேறு யாருக்கும் கொடுக்க முடியாது. அந்த பேஷண்ட் வெறிநாய் மாதிரி குலைத்துக் கொண்டிருப்பார்கள். அந்த பேஷண்ட் டிஸ்சார்ஜ் ஆகிப் போகவேண்டும் அல்லது இறந்துபோகவேண்டும். அதற்குப் பிறகு தான் இன்னொரு பேஷண்டை அங்கே கொண்டு வரக்கூடிய நிலைமை இருக்கிறது. அவ்வாறு இருக்கிற அவல நிலையைப் போக்கி ஜெனரல் ஆஸ்பத்திரியில் அதற்காக நம்பர் ஆஃப் ரூம்ஸை விஸ்தரித்து 4, 5 பேஷண்ட்கள் ஒரே நேரத்தில்

1973 நவம்பர் 24]

இருப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்ய முன்வருமா? இல்லா விட்டால் ஒரு பேஷண்ட் இருக்கிற வரையிலும் இன்னொரு பேஷண்ட் அங்கே அட்மிட் பண்ண முடியாது என்ற நிலைமை இருக்கிறது. அதற்குப் பரிகாரம் காண அரசு செயல்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இது தொடர்பு உள்ள கேள்வி தான் என்று சொன்னாலும் தனியான பிரச்னை. இதையெல்லாம் அங்கத்தினர் அவர்கள் எழுதி அனுப்பினால் பரிசீலித்து தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். ஏனென்றால் அதைப்பற்றிய விவரங்கள் என்னிடம் இல்லை.

ஆரோவில் நகரமைப்புக்கு உதவி

***365 வினா—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

புதுவை மாநிலம் பாண்டிச்சேரி அருகே ஆரோவில் நகரம் அமையப்பெற நமது அரசினரிடம் உதவி ஏதேனும் கோரப் பட்டுள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : உதவி கேட்கப்படவில்லை.

திருச்சிராப்பள்ளி-கரூர் நெடுஞ்சாலை

***366 வினா—திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம்-கூடலூர் நெடுஞ்சாலையில் திருச்சிராப் பள்ளிக்கும் கரூருக்கும் இடையிலுள்ள பாதையை விரிவுபடுத்தி நேர்படுத்தும் (straightening) திட்டம் ஏதும் அரசிடம் உண்டா?

(இ) ஆம் எனில், எப்பொழுது இது குறித்து பணி துவங்கும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) நிதி நிலைமை, வேலையின் முக்கியத்துவம் ஆகியவற்றை பொறுத்து பகுதி பகுதியாக பார்ப்பதற்காக ஒதுக்கப்படும் தொகையின் கீழ் இவ்வேலை எடுத்துக் கொள்ளப்படும்.